# சம்ஸ்கிருத காவியவியல் நூல்களுள் அதிகமான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை வரைவிலக்கணப்படுத்தும் குவலயானந்தம் - ஓர் ஒப்பியலாய்வு

S. நவநீதகிருஷ்ணன்

**ஆய்வுச்சுருக்கம்**

சம்ஸ்கிருத காவியவியல் நூல்களுள் குவலயானந்தம் அதிக எண்ணிக்கையான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை விளக்கியுள்ளது என்பதை ஒப்பீட்டு ரீதியில் நிறுவுதலை நோக்காகக் கொண்ட இவ்வாய்வானது விவரண முறைமையினை அடிப்படையாகக கொண்டுள்ளது. சாத்ருஸ்யகர்ப்ப வகை சார்ந்த ஒற்றுமைத் தன்மையை அடிப்படையாகக் கொண்ட அலங்காரங்களாக முப்பத்தியொரு அலங்காரங்கள் கூறப்படுகின்றன. அவையாவன உபமா, உபமேயோபமா, அநன்வய, ஸ்மரண, ரூபக, பரிணாம, ஸந்தேஹ, ப்ராந்திமத், உல்லேக, நிஸ்ச்சய, அபஹ்னுதி, உத்பிரேக்ஷா, அதிசயோக்தி, துல்யயோகிதா, தீபக, ப்ரதிவஸ்தூபமா, த்ருஷ்டாந்த, நிதர்சனா, வ்யதிரேகா, ஸஹோக்தி. விநோக்தி, சமாசோக்தி, பரிகரா, ஸ்லேஷ, அப்ரஸ்துதப்ரசம்சா, அர்த்தாந்தரநியாஸ, பர்யாயோக்த, வ்யாஜஸ்துதி, ஹேது, அனுகூல, ஆக்ஷேப ஏன்பனவாகும். இவற்றுள் நிஸ்ச்சய, அனுகூல ஆகிய இரு அலங்காரங்களைத் தவிர ஏனைய இருபத்தொன்பது அலங்காரங்களையும் குவலயானந்தம் விளக்குவதால் அதிக எண்ணிக்கையான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை குவலயானந்தம் வரைவிலக்கணப்படுத்தியுள்ளமை ஒப்பீட்டு ரீதியில் நிறுவப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள் - சம்ஸ்கிருத இலக்கணம், சம்ஸ்கிருத காவியம், அலங்காரங்கள், த்வனிக்கோட்பாடு, நியாயமூலங்கள்

## சம்ஸ்கிருத காவியவியல் - அறிமுகம்

சம்ஸ்கிருத காவியவியல் என்பது மிகப்பரந்து விளங்கும் பலகோட்பாடுகளின் தொகுதியாக அமைவது. இச்சிந்தனையின் தோற்றுவாய் குறித்து நோக்கும் போது சமஸ்கிருத காவியவியல் நூல்களின் தோற்றத்தினைத் தோற்றுவாயாகக் கொள்வதா அல்லது படிப்படியாக உருமாற்றம் பெற்ற அல்லது சிந்தனை முதிர்ச்சியின் விளைவாலேற்பட்ட மாற்றங்களை உள்ளடக்கிய கோட்பாடுகளின் அடிப்படையாக அமைந்த எண்ணங்களின் தோற்றத்தைத் தோற்றுவாயெனக் கொள்வதா? என்பது ஆய்வுக்குரியதாகும். கலைநோக்கில் கோட்பாடுகள் உணர்வுடன் தொடர்புபட்டவையாகக் காணப்படுவதால் உணர்வின் அடிப்படையில் ஏற்பட்ட எண்ணங்களின் விளைவே கலைக்கோட்பாடுகளின் உருவாக்கம் என்ற சிந்தனை பொருத்தமானதாகவே காணப்படுகிறது. மனிதனின்சிந்தனையுட்புகுந்த இக்கோட்பாடுகள் செம்மையாக்கப்பட்ட பின் எழுத்துருப்பெற்றிருக்க வாய்ப்பிருப்பதால் "தோற்றம்" என்ற ஆழ்ந்த பொருள் தரும் சொல் எண்ணங்களின் தோற்றத்தையே உணர்த்தி நிற்பதாகக் கொள்வதில் தவறில்லை. இவ்வகையில் இத்தகைய எண்ணங்கள் எப்போது தோற்றம் பெற்றன என்பது அடுத்துச் சிந்திக்க வேண்டிய விடயமாகிறது. சமஸ்கிருத காவியவியலாளர்கள் தத்தமது கோட்பாடுகளை வலியுறுத்த காவியம் என்றால் என்ன? காவியத்தின் நோக்கம் அல்லது பயன் என்ன? காவியத்தின் அடிப்படையான பண்புநலன்கள்